மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அசல் வழக்கு எண். 60/2019 நாள்– 27.01.2023

வாதியின் / பிரதிவாதியின் ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி P.சீதாலட்சுமி, Gr.III பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்– சங்கரலிங்கம் (பி.வா.சா.1) | தந்தையின் பெயர்– |
| விலாசம்– | தாலுகா– |
| வயது– | தொழில் |
| ஜாதி– | சமயம்– |

நான் இந்த வழக்கின் வாதியாவேன். எனது முதல் விசாரணையை சாட்சியமான எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யாவும் உண்மையானவை. மேலும் அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவைதான். நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னுடைய முதல் விசாரணையை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். எனது தரப்பு ஆவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

1) கதவு எண்.1/55 உடைய வீட்டிற்கு 1ம் பிரதிவாதியின் மனைவி கண்ணகி பெயரில் செலுத்தப்பட்ட தீர்வை ரசீதுகள் – 7 எண்ணம் (அசல்) – பி.வா.சா.ஆ.1.

2) கதவு எண்.1/63 உடைய வீட்டிற்கு 1ம் பிரதிவாதி பெயரில் செலுத்தப்பட்ட தீர்வை ரசீதுகள் – 9 எண்ணம் (அசல்) – பி.வா.சா.ஆ.2.

3) சண்முகவேல் பெரியல் 1ம் பிரதிவாதி செலுத்திய மின் கட்டண ரசீதுகள் – 16 எண்ணம் (அசல்) – பி.வா.சா.ஆ.3.

4) 11.5.2009 அன்று சண்முகவேல் கண்ணகிக்கு எழுதிக்கொடுத்த கதவு எண்.1/55 உடைய வீடுஇ காலியிடத்தைப் பொறுத்த பதிவு செய்யப்படாத நன்கொடை பத்திரம் (அசல் ) – பி.வா.சா.ஆ.4

5) 20.2.2008 அன்று சண்முகவேல் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்படாத கிரைய ஆவணம் (அசல்) – பி.வா.சா.ஆ.5

6) 20.9.2007 அன்று சண்முகவேல் வாதி, 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்படாத சம்மத ஆவணம் (அசல்) – பி.வா.சா.ஆ.6.

பிராதில் கோரியபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி கு.வி ஒத்திவைக்கப்படுகிறது)